# தேவனால் அருளப்பட்ட ஒரு தடுப்பூசி



(நோய் எதிர்ப்பு சக்தி (Immunity) என்ற பொருளின் பேரில் இந்த மணிநேர செய்தியிலிருந்து ஒரு மேற்கோள்)

**சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து**

## செய்தி: **இராப்போஜனம்**, பிப்ரவரி 4, 1962, பத்தி எண் 102-104

102. இன்று அங்கே ஒரு குறிப்பிட்ட ஊழியக்காரர் பேசிக் கொண்டிருந்தார், அவர் பேசுவதை நான் கேட்டேன், ஒரு ஒலிபரப்பில் அவர் இதைக் கூறினார், அவர் நாட்டிற்குள் வந்தபோது, அவருக்கு ஒரு பெரிய சைனஸ் தொந்தரவு (sinus trouble) இருந்தாகக் கூறினார், அப்போது அவர்கள் ஒரு அறுவை சிகிச்சையைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார்களாம். அவர்கள் *இதையும் அதையும்* செய்யப் போவதாகக் கூறினார்களாம், அவர்மேல் வெட்டி, அறுவை சிகிச்சை செய்து, அந்த சைனஸ் சுரப்பிகளின் பகுதியை வெளியே எடுக்கப் போவதாக இருந்தார்களாம், அது அவருடைய முகத்தை உள்ளே அமுங்க வைத்திருப்பதாகவும் மற்றும் அதைப் போன்ற மற்றவைகளையும் கூறினார் களாம். மேலும் அவர் பீப்பாய் (அளவு) மாத்திரைகளை சாப்பிட்டதாகவும் கூறினார். அவர் அநேக மாத்திரைகளை எடுக்க வேண்

டியது போன்று தோன்றியதாம். ஆனால் அவர் ஒரு நல்ல கிறிஸ்தவ மருத்துவரிடம் வந்திருப் பாரானால், அம்மருத்துவர், "மாத்திரைகளை யும், அறுவைச் சிகிச்சையையும் மறந்து விடு வோம், நாம் சரீரத்தை படிப்படியாக வலுவுள்ள தாக்குவோம் (build up), அப்பொழுது அதுவால் சைனஸ் தொற்றை எதிர்க்க முடியும் (sinusitis - சைனஸ் தொற்றானது, சளித் தொல்லையினாலோ, ஒவ்வாமையினாலோ ஏற் படுகிறது - மொழிபெயர்ப்பாளர்)." அதுவே போதுமானது!

103. அந்த ஜனங்கள், தாங்கள் வழக்கமாக ஜீவிப்பது போன்று அவ்வளவு நீண்ட காலம் ஜீவிக்காமல் போவதற்கான காரியம் தான் என்ன? நாம் *இதற்காகவும் அதற்காகவும்* ஊசி போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது, நாம் எல்லாவிதமான மருந்துகளையும் வைத்து நாமே நம்மேல் தெளித்துக்கொள்கிறோம். அது என்ன செய்கிறது? அது நம்மை மிருதுவானவர் களாகவும், கொழுப்பானவர்களாகவும், நலிவுற்ற வர்களாகவும் (flabby), எந்த உறுதியும் அற்ற வர்களாகவும் செய்து விட்டன. நீண்ட காலத்

திற்கு முன்பு, மனிதன்... ஏன், நாம் எல்லா வற்றிற்கும் ஒவ்வாமை உள்ளவர்களாயிருக் கிறோம். இப்பொழுது அவர்கள் மோசமான ஒவ்வாமைகளையும் (mal-allergies) மற்ற எல் லாவற்றையும் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

104. நான் ஆப்பிரிக்காவில் நின்றிருந்தேன், என்னால் மலேரியாவுக்காக ஊசி போட முடியாதிருந்தது. ஆனால் ஒரு மலேரியா கொசு வானது என் கரத்தின் மேல் அமர்ந்திருந்தாலும், எனக்கு மலேரியா வந்திருக்கும். அவைகள் ரீங்காரம் எழுப்பாது, அநேகமாக அதை அறிந்து கொள்ளவே மாட்டீர்கள், அவைகள் லேசாக, (வந்து) அமர்ந்து கொள்ளும், அதுவே போதுமானது, உங்களுக்கு அது வந்து விடும். நீங்கள் ஜீவிப்பீர்களானால், பதினைந்து வரு டங்கள் அதைக் கொண்டிருப்பீர்கள். அப்போது சிலசமயங்களில் நீங்கள் அதை உடையவர் களாய் மரித்தும் போகலாம். அந்தப் பூர்வக்குடி களான பழங்குடி மக்களும் (natives) அங்கு தான் இருந்தார்கள், அவர்கள் தங்களுடைய சிறு குடிசைகளில் இருந்தார்கள், அப்போது அவர் களுடைய கால்கள் எங்கும் கொசுக்கள் மூடி மொய்த்துக் கொண்டிருந்தன, அவர்கள் நிர்வா

ணமாக இருந்தார்கள். கொசுக்கள் அவர்கள் மேல் கடித்துக்கொண்டிருந்தாலும், அவை மலேரியா கொசுக்களாயிருந்தாலும், அது அவர்களைத் தொல்லைப்படுத்தவே செய்யவில்லை. ஏன்? **அவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியை** (immunity) **படிப்படியாக கட்டியிருந்தார்கள்** (built up). **அவர்கள் தேவனால் அருளப்பட்ட ஒரு தடுப்பூசியை உடையவர்களாக இருந்தார்கள்.**

★★★★★